# ශ්‍රී ලංකා ජනරජයේ ගැසට් පත්‍රය

## இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 154 — 1975 මාර්තු 07 වැනි සිකුරාදා — 1975.03.07

154 ஆம் இலக்கம் — 1975 ம் ஆண்டு மாச்சு மாதம் 07 ந் திகதி வெள்ளிக்கிழமை

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


# பகுதி I: தொகுதி (III)—வியாபார உரிமை அடையாளங்களும் ஆக்க உரிமை விளம்பரங்களும்

(ஒவ்வொரு மொழியின் ஒவ்வொரு பகுதியும் வெவ்வேறாகக் கோவை செய்துவைப்பதற்காக தனித்தனிப் பக்கங்கள் தரப்பட்டுள்ளன)


| | பக்கம் | | பக்கம் |
|---|---|---|---|
| வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள் .. .. | 37 | அலங்காரச் சித்திரச்சட்ட விளம்பரங்கள் .. .. | — |
| வியாபார உரிமை அடையாள அறிவிப்பு .. .. | — | வடிவமைப்புக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | — |
| ஆக்கஉரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள் .. | 41 | பலவிதமானவை .. .. .. | — |


*கவனிக்க.—இலங்கை முன்னுட் படையாட்கள் கழகம் சட்டமூலம் 1975 ஆம் ஆண்டு பெப்புருவரி மாதம் 28 ஆந் தேதிய இலங்கைக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகையின் பகுதி II இற்குக் குறை நிரப்பியாகப் பிரசுரிக்கப்பட்டுள்ளது.*

## வியாபார உரிமை அடையாள விளம்பரங்கள்

### வியாபார உரிமை அடையாள அலுவலகம்

வியாபார உரிமை அடையாளம் சம்பந்தமான சகல கடிதங்களும் வியாபார உரிமை அடையாளப் பகுதிப் பதிவாளர், கம்பெனிகள் பதிவாளர், அலுவலகம் கட்டடம் 5, எச்சலன் சதுக்கம், கொழும்பு 1 என்ற விலாசத்திற்கு அனுப்பப்படல் வேண்டும்.

### பரிசோதனைக்குரிய நேரம்

அலுவலகத்திற்குச் சொந்தமான பதிவேடுகளைப் பொதுமக்கள் பார்வையிடுவதற்காக, அரசாங்க விடுமுறை நாட்கள் தவிர்ந்த கிழமை நாட்களில் காலை 9 மணிதொடக்கம் மாலை 3 மணி வரையும் திறந்திருக்கும்.

எனினும், பரிசோதனைக்குரிய விண்ணப்பப்பத்திரங்கள் கிழமை நாட்களில் மாலை 2 மணிவரையும் ஏற்றுக் கொள்ளப்படும்.

### நிறங்களை வரையறுக்கும் வியாபார உரிமை அடையாளங்கள்

ஒரு வியாபார உரிமை அடையாளம் பதிவு செய்யப்படும் பொழுது, அது குறிப்பிட்ட நிறங்களுக்கு வரையறுக்கப்பட்டதென்று விண்ணப்பப் பிரசுரத்தில் குறிப்பிட்டிருந்தால் அந்த நிறங்கள் கூடுமானவரை வழக்கமான கட்டியம் சார்ந்த முறையில் இத்துடனுள்ள அடையாளச் சின்னத்தில் காட்டப்படும்.

### கூட்டுச் சேர்க்கை

150 ம் அதிகார வியாபார அடையாளச் சட்டத்தின் 23 ம் பகுதியின் கீழ் பிரசுரிக்கப்பட்ட ஒரு அடையாளம் இன்னொரு வியாபார அடையாளத்துடன் கூட்டுச் சேர்க்கப் படவேண்டுமெனக் குறிப்பிடப்பட்டிருந்தால், அது அதன் உத்தியோக எண்ணினால் காட்டப்படும்.

### " அ " அல்லது " ஆ " பகுதியின் கீழ் விண்ணப்பம்

பதிவேட்டின் " அ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் வேறு யாதும் எழுத்தின்றி உத்தியோக எண் மூலமாகவே காட்டப்படும். பதிவேட்டின் " ஆ " பகுதியின் கீழ்வரும் விண்ணப்பங்கள் உத்தியோக எண்ணுக்கு முன் " ஆ " என்ற எழுத்தால் தெளிவாகக் காட்டப்படும்.

---

*வாராந்த வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு அனுப்பப்படும்*
*அறிவித்தல்கள் சம்பந்தமான விசேட அறிவித்தல்*

*எதிர்வரும் வாராந்த வர்த்தமானிகள் பிரசுரிக்கப்படும் திகதிகள், வர்த்தமானி அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் கடைசித் திகதிகள், நேரங்கள் சம்பந்தமாக இவ்வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் வெளிவரும் முக்கிய அறிவித்தலைக் கவனிக்குமாறு வேண்டப்படுகிறது. வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கு மேற்கூறிய அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் உரிய விலாசதாரருக்குத் திருப்பி அனுப்பிவைக்கப்படும்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு,*
*1972 ம் ஆண்டு மே மீ 5 ந் உ.*

*எல். டபிள்யூ. பி. பீரிஸ்,*
*அரசாங்க அழுத்தகர்.*

## எதிர்ப்பு

பின்வரும் வியாபார அடையாளங்கள் பதிவு செய்வதை யாராயினும் எதிர்க்கக் காரணங்கள் இருந்தால் இந்த வர்த்தமானப் பத்திரிகைத் தேதியிலிருந்து இரு மாதங்களுக்குள் அழிக்கப்படாத அல்லது பதிவு செய்த 25 ரூபா பெறுமதியான முத்திரையுடன், ரீ. எம். 7 பத்திரத்தில் எதிர்ப்பு அறிவித்தலைச் சமர்ப்பிக்க வேண்டும். பதிவாளர் தகுதியானதெனக் கருதினால், அவர் விதிக்கும் நிபந்தனைகளுடன் எதிர்ப்புத் தெரிவிக்கும் கால எல்லை நீடிக்கப்படலாம். பதிவு கோரும் விண்ணப்பகாரர் தனது விண்ணப்பத்தை மீளப்பெறுவதற்குச் சந்தர்ப்பத்தை அளிக்கும் முகமாக, முறைப்படியான அறிவித்தல் எதிர்ப்பு விண்ணப்பம் தயாரிப்பதற்கு வேண்டிய செலவைச் செய்யுமுன், அவருக்குக் கடிதமூலம் நியாயமான அறிவித்தல் கொடுத்தல் வேண்டும்., எதிர்ப்பவர் அத்தகைய அறிவித்தலைக் கொடுக்கத் தவறின், விண்ணப்பகாரர் எதிர்ப்பை எதிர்த்து வாதிடாதவிடத்து, எதிர்ப்பவரின் செலவு கோரும் மனு பரிசீலனை செய்யப்படும்போது அது கவனத்துக்கெடுக்கப்படும்.

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,865. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஜூலை மாதம் 26 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : த கொக்கா-கோலா கம்பெனி, தெலவரே இராச்சியச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பெற்று இயங்கி வருமோர் கூட்டுத்தாபனம், இல. 515, மடிசன் அவெனியு, நியுயோர்க் நகரம், நியுயோர்க் இராச்சியம் 10022, அமெரிக்க ஐக்கிய இராச்சியங்கள் என்ற முகவரியில் அலுவலகத்தைக் கொண்டது ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீவி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 42. (6) வியாபாரச் சரக்கு : வாய்வூட்டப்படாத, மதுசாரமற்ற பானங்களும், வாய்வூட்டப்பட்ட அல்லது வாய்வூட்டப்படாத பானங்கள் செய்வதற்கான தயாரிப்புக்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**VERVE**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ௵ ஜூலை மீ 23 ந உ.

3-28/1—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,836. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் ஒகஸ்டு மாதம் 31 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : ஜோன்சன் அன்டு ஜோன்சன் (நியு ஜர்ஸி இராச்சியச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பெற்று இயங்கி வருமோர் ஐக்கிய அமெரிக்க இராச்சியக் கம்பெனி) இல. 501, ஜோர்ஜ் வீதி, நியு பிறண்ஸ்விக், நியு ஜர்ஸி, ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீவி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : மருந்துப் பாகசாலை ஆக்கத் தயாரிப்புக்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**BUTIBEL**

ஜே. அலன் ஐ. விஜயக்கோன்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ௵ செப்டெம்பர் மீ 2 ந உ.

3-28/2—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,348. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் பெப்ரவரி மாதம் 20 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : அங்கொஸ்ரியுரு பிற்றர்ஸ் (டாக்டர் ஜே. ஜி. பி. சீஜர்ட் அன்ட் சன்ஸ்) லிமிட்டட், றினிடட்-ரொட்டுச் சட்டங்களின் அடிப்படையில் இணைக்கப் பெற்றதோர் கம்பெனி, இல. 6&8, ஜோர்ஜ் வீதி, போட் ஒப் ஸ்பெயின், றினிடட் ; சுவையூட்டி உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீவி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 43. (6) வியாபாரச் சரக்கு : மது சுவையூட்டிகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**ANGOSTURA**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இலக்கங்கள் 5021, 6168, 10,996, 22,667 ஆகியவற்றுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. அலன் ஐ. விஜயக்கோன்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ௵ செப்டெம்பர் மீ 6 ந உ.

3-28/3—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,742. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் ஜூலை மாதம் 24 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : த வெல்கம் ஃபவுண்டேஷன் லிமிட்டட், ஓர் பிரித்தானிய வரையறுத்த பொறுப்புக் கம்பெனி, இல. 183/193, யுஸ்ரன் வீதி, லண்டன் என். டபிள்யு 1 ; இங்கிலாந்து ; இரசாயன உற்பத்தி. (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீவி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : ஒளடத மருந்துப் பாகசாலை ஆக்கத் தயாரிப்புக்களும் சத்துக்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**DANITINA**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 33,743 பதிவு செய்யப்படுமிடத்து அத்தருணம் அதனுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. அலன் ஐ. விஜயக்கோன்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ௵ செப்டெம்பர் மீ 2 ந உ.

3-28/4—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,743. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் ஜூலை மாதம் 24 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : த வெல்கம் ஃபவுண்டேஷன் லிமிட்டட், ஓர் பிரித்தானிய வரையறுத்த பொறுப்புக் கம்பெனி, இல. 183/193, யுஸ்ரன் வீதி, லண்டன் என். டபிள்யு. 1 ; இங்கிலாந்து ; இரசாயன உற்பத்தி. (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீவி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : ஒளடத மருந்துப் பாகசாலை ஆக்கத் தயாரிப்புக்களும் சத்துக்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**DANATAN**

இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 33,742 பதிவு செய்யப்படுமிடத்து அத்தருணம் அதனுடன் இணைக்கப்படவிருக்கிறது.

ஜே. அலன் ஐ. விஜயக்கோன்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ௵ செப்டெம்பர் மீ 2 ந உ.

3-28/5—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,977. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் செப்டெம்பர் மாதம் 6 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : பாக், டேவிஸ் அன்ட் கொம்பனி, ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தின் மிச்சிக்கன் அரசினது சட்டங்களின் அடிப்படையில் நிறுவப் பெற்றதோர் கூட்டுத்தாபனம், ஜோசப் கம்போ அவெனியு ஆற்றுக்-கண்மையில், டிற்றெயிற், மிச்சிக்கன் 48,282 ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : " டைஃபினில்ஹைடன்ரொயின் " மற்றும் அவற்றுக்கான உப்புகளை உள்ளடக்கிய மருந்துப் பாகசாலை ஆக்கத் தயாரிப்புகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**DILANTIN**

ஆர். கொன்சல் கோரால,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 2 ந் உ.

3-34/1—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,776. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஜூன் மாதம் 28 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : அம்செம் பிறொடக்ஸ் இங்க்.,—ஐக்கிய அமெரிக்க இராச்சியத்தைச் சேர்ந்த பென்சில்வேனியப் பொதுநல அரசுவினது சட்டங்களின் அடிப்படையில் நிறுவப் பெற்றதோர் கூட்டுத் தாபனம், புறூக்சயிட் அவெனியு, அம்ப்லர், பென்சில்வேனியா, ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள்; இரசாயன உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 2. (6) வியாபாரச் சரக்கு : " எத்திலின் " உருவம் போன்ற தாவர வளர்ச்சியை ஊக்குவிக்கும் ஏதுகோல்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**ETHREL**

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு ஜூன் மீ 24 ந் உ.

3-34/2—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,133. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஒக்டோபர் மாதம் 31 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : றெக்கிற் அன்டு கொல்மன் பிறொடக்ஸ் லிமிட்டட், ஓர் பிரித்தானியக் கம்பெனி, டன்சம் ஒழுங்கை, ஹல், யோக்ஷயர், இங்கிலாந்து ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : ஊசிகள் மூலம் செலுத்தப் படுகின்ற மருந்துப் பாகசாலைத் தயாரிப்புகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**REVIVON**

ஜே. அலன் ஐ. விஜயக்கோன்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு நொவெம்பர் மீ 12 ந் உ.

3-34/3—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,881. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் செப்டெம்பர் மாதம் 22 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : ஃபாபென் ஃபப்றிக்கன் பேயர், ஐக்டியென் கெசல்ஷா ஃப்ற், (ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுவினது சட்டங்களின் அடிப்படையில் முறையாக நிறுவப் பெற்றதோர் கம்பெனி) லீவர்குசென்-பேயர்வர்க், மேற்கு ஜெர்மனி ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் த சில்வா அன்டு மெண்டிஸ், த. பெ. இல. 884, கொழும்பு. (5) வகுப்பு : 3. (6) வியாபாரச் சரக்கு : மானிட உபயோகத்திற்கான மருந்துப் பாகசாலை ஆக்கத் தயாரிப்புக்கள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

**GONUBAL**

ஜே. அலன் ஐ. விஜயக்கோன்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 2 ந் உ.

3-35—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,259. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் ஜனவரி மாதம் 3 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : டெயுற்சி கெசல்ஸ்ஷாஃப்ற் ஃபர்ஷயெட் லிங்ஸ்-பெக்கயெம்ஃபங்க் எம்பிஎச், ஜெர்மன் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பெற்றதோர் கூட்டுத் தொகுதிக் கம்பெனி, நெவு மெயின்சர் ஸ்றஸ்ஸி 1, 6 ஃபிறுங்பர்ட் ஆம் மெயின், ஜெர்மனி என்ற முகவரியைச் சேர்ந்தது ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 2. (6) வியாபாரச் சரக்கு : சமுதாய எதிரிகளான விலங்குகளையும் தாவரங்களையும் நாசஞ் செய்வதற்கான சேர்க்கைகள், கிருமிகள், நாசஞ் செய்யும் பிராணிகளை அழிக்கும் மருந்துகள், தொற்று நீக்கும் சேர்க்கைகள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**GASTOXID**

இவ்வியாபார உரிமை அடையாளப் பதிவு "GAS" "TOXIL" என்ற சொற்களைத் தனித்தனியாகப் பாவிப்பதற்கு ஏகபோக தனியுரிமை வழங்கவில்லை.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு பெப்வரி மீ 4 ந் உ.

3-33—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 32,136. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் நொவெம்பர் மாதம் 24 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : மஜிக் செஃப், இங்க்., தெலவரே இராச்சியச் சட்டங்களின் அடிப்படையில் நிறுவப்பெற்று இயங்கி வருமோர் கூட்டுத்தாபனம், இல. 740, கிங் எட்வர்ட் அவெனியு, எஸ். ஈ. கிளிவ்லண்ட், ரெனஸி 37311, ஐக்கிய அமெரிக்க இராச்சியங்கள் ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜூலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 18. (6) வியாபாரச் சரக்கு : உஷ்ணமூட்டுதல், சமைத்தல் சாதனங்களும், குளிரூட்டுதல் அமைப்புக்களும் உபகரணங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

**MAGIC CHEF**


இவ்வியாபார உரிமை அடையாளப் பதிவு "தலைமைச் சமையற் காரனின்" உருவத்தினது ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கவில்லை.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு மார்ச் மீ 21 ந் உ.

3-32—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,472. (2) பெற்ற திகதி : 1971 ம் வருடம் ஏப்ரல் மாதம் 16 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : நீம்ஸ்மா சிகரெட்டன்-ஃப்பரிக்கன் ஜி. எம். பி. எச்; ஜெர்மன் சட்டங்களின் அடிப்படையில் ஒழுங்கு செய்யப்பட்ட ஒரு கூட்டுப்பங்குத் தொகுதிக் கம்பெனி, ஹம்பேக், பார்க்ஸ்ராபி 51, மேற்கு ஜெர்மனி ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 45. (6) வியாபாரச் சரக்கு : எல்லாவித புகையிலை உற்பத்திப் பொருட்களும், குறிப்பாக சிகரட்டுகள். (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :




(அ) இவ்வியாபார உரிமை அடையாளப் பதிவு " டானியல் " " வோக்கர் " என்ற குடும்பப் பெயர்களின் ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கவில்லை.

(ஆ) இவ்வியாபார உரிமை அடையாளம் விண்ணப்பத்தில் காட்டப்பட்டுள்ள நிறங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு பெப்ரவரி மீ 28 ந் உ.

3-30—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 31,570. (2) பெற்ற திகதி : 1969 ம் வருடம் ஜுன் மாதம் 18 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) சீமன்ஸ் ஐக்டியென் கெசல்ஷாஃப்ற், ஓர் ஜெர்மன் கம்பெனி, விற்றெல் பச்சர்பிளற்ஸ் 2,8000, மஞ்சன் 2, ஜெர்மனி ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 40. (6) வியாபாரச் சரக்கு : 40 ஆம் வகுப்பினுள் அடங்கிய சகல பண்டங்களுமான மலாயன் தீவுகளினுள்ள பல மரங்களினது கட்டிச்சாறு, றபர், றப்பருக்குப் பதிலான பொருட்கள், மற்றும் இச்சத்துக்களிலிருந்து உண்டாக்கப்படும் பொருட்கள்—இப்பண்டங்கள் யாவும் வேறு வகுப்புகளில் சேர்க்கப்படாதவை. (7) வியாபாரச் சின்னத்தின் பிரதி உருவம் :

SIEMENS

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1973 ம் ஆண்டு ஜூலை மீ 19 ம் உ.

3-29/1—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

(1) வியாபாரச் சின்னம் இல. : 33,428. (2) பெற்ற திகதி: 1971 ம் வருடம் மார்ச் மாதம் 22 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : பிரிட்டிஷ் லீலண்ட் மோட்டர் கோர்ப்பரேஷன் லிமிட்டட், ஓர் பிரித்தானியக் கம்பெனி, பார்க்லி ஸ்குவயர் ஹவுஸ், பார்க்லி ஸ்குவயர், லண்டன், இங்கிலாந்து ; மோட்டர் உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 22. (6) வியாபாரச் சரக்கு : மோட்டர் இயக்க நில ஊர்திகளும் அவற்றுக்கான உதிரிப்பாகங்களும். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :

L

இவ்வியாபார உரிமை அடையாளப் பதிவு " L " என்ற ஆங்கில அகர வரிசை எழுத்தினது ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கவில்லை.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு, 1974 ம் ஆண்டு ஜூன் மீ 26 ம் உ.

3-29/2—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 26,708. (2) பெற்ற திகதி : 1965 ம் வருடம் எப்பிரல் மாதம் 21 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : கிறிஸ்ரினஸ் கே. ஜி. (ஜேர்மன் தேசிய இனத்தவர் டாக்டர் ஃபிறெட்றிக் கிறிஸ்ரினஸ், திருமதி மாறி-எலிசாபச் (திருமணத்திற்கு முன் றிற்றர்) ஜெர்மன் சமஷ்டிக் குடியரசுவினது சட்டங்களின் அடிப்படையில் பதிவு செய்யப்பெற்றதோர் வரையறுத்த பங்குடைமைத் தாபனம், இல. 28, பிறிமன் 1, டொயெற்லின்ஜடி-ஸ்றஸ்ஸீ 4, ஜெர்மனி ; உற்பத்தியாளர்களும் வியாபாரிகளும். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீஸி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 45. (6) வியாபாரச் சரக்கு : புகையிலை விளைவுப் பொருட்கள். (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




(அ) இவ் வியாபார உரிமை அடையாளப் பதிவு " P ", " E " என்ற ஆங்கில அகர வரிசை எழுத்துக்களின் ஏகபோக பாவிப்பிற்குத் தனியுரிமை வழங்கவில்லை.


(ஆ) இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இல. 30,144 உடன் இணைக்கப்பட்டிருக்கிறது.

ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 9 ந் உ.

3-31/1—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

(1) வியாபாரச சின்னம் இல. : 33,006. (2) பெற்ற திகதி : 1970 ம் வருடம் செப்டெம்பர் மாதம் 14 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச்சின்னத்தின் சொந்தக்காரர்) : கல்லஹர் லிமிட்டட், பெரிய பிரித்தானிய ஐக்கிய இராச்சியத்தினதும் வட அயர்லாந்தினதும் சட்டங் களின் அடிப்படையில் நிறுவப் பெற்றதோர் கம்பெனி, வர்ஜினியா ஹவுஸ், 134/148, யோக் வீதி, பெல்ஃபஸ்ற், வட அயர்லாந்து ; உற்பத்தியாளர்கள். (4) இலங்கையில் அவருக்கேதும் விலாசம் இருப்பின் அது : திருவாளர்கள் ஜுலியஸ் அன்டு கிறீவி, த. பெ. இல. 154, கொழும்பு. (5) வகுப்பு : 45. (6) வியாபாரச் சரக்கு : சிகரெட்டுகள் (7) வியாபாரச்சின்னத்தின் பிரதி உருவம் :




இவ்வியாபார உரிமை அடையாளம் வியாபார உரிமை அடையாள இலக்கங்கள் 30,414, 31,217, 31,234 ஆகியவற்றுடன் இணைக்கப்பட விருக்கிறது.

ஜே. அலன் ஐ விஜயக்கோன்,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1974 ம் ஆண்டு செப்டெம்பர் மீ 5 ந் உ.

3-31/2—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

(1) வியாபாரச் சின்னம் இல. : 34,865. (2) பெற்ற திகதி : 1972 ம் வருடம் டிசெம்பர் மாதம் 5 ம் திகதி. (3) விண்ணப்பதாரர் (வியாபாரச் சின்னத்தின் சொந்தக்காரர்) : குடா விதானகே ஜஸ்ரின் டி சில்வா கே. வி. ஜி. டி. சில்வா அண்ட் சன்ஸ் என்பதாக வியாபாரஞ் செய்பவர், இல. 415, காலி வீதி, கொழும்பு 4 ; புத்தக வியாபாரிகள், வெளி யீட்டாளர்கள், சாதாரண இறக்குமதியாளர்கள். (4) இலங்கையில் அவருக் கேதும் விலாசம் இருப்பின் அது : —. (5) வகுப்பு : 39. (6) வியாபாரச் சரக்கு : புத்தகங்களும் பருவ வெளியீடுகளும். (7) வியாபாரச்சின்னத் தின் பிரதி உருவம் :



ஆர். எல். த சில்வா,
வியாபாரச்சின்னப் பதிவாளர்.

கொம்பனிப் பதிவாளர் பகுதி,
கொழும்பு,
1973 ம் ஆண்டு ஒக்டோபர் மீ 1 ந் உ.

3-36—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

## ஆக்க உரிமைக் கட்டளைச் சட்டத்தின் கீழ்வரும் அறிவிப்புகள்

### அறிவித்தல்

*பின்வரும் விபரக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது :—*

*1968 டிசெம்பர் 17-ம் திகதிய 6280-ம் இலக்கம் (46-ம் பிரிவின் கீழ் 17.12.1963-ம் திகதிய ஐக்கிய இராச்சிய ஆக்கவுரிமைப் பதிவு இல. 992,168)*

*சொஸைட்டே டெஸ் யுசினஸ் கெமிகியூஸ் ரோன்-போலெங்க் "இமிடஸோல் பெறுதிகளைத் தயாரிப்பதற்கான முறை" பொழிப்பு :—*

*பின்வரும் வாசகத்தைக் கொண்ட உரிமைக் கோரிக்கை 1-லிருந்து கண்டுபிடிப்பின் இயல்பை உறுதிப்படுத்தலாம் :*

*என்ற பொதுச் சூத்திரத்தின்படி ஒரு 1-(2-ஐதரொட்சிஎதயில்)-5-நைத்ரோஇமிடஸோல் தயாரிப்பதற்கான ஒரு முறை.*

*(இச்சூத்திரத்தில், R குறிப்பது, ஓர் ஐதரசன் அணு, அல்லது ஐந்து வரையிலான காபன் அணுக்கள் அடங்கிய ஓர் அற்கயில் கூட்டம் அல்லது ஓர் எரயில், ஏரற்கயில் அல்லது அலிசைக்கிளிக் குக் கூட்டம்) அல்லது*

*என்ற பொதுச் சூத்திரத்தின்படி, ஒரு நைத்ரோஇமிடஸோல் சகிதம் தாக்குந் திறனுள்ள எதயிலின் ஒக்சைட்டு அடங்கிய அதன் ஓர் அமிலக் கூட்டலுப்பு.*

*(இச்சூத்திரத்தில், இதற்குமுன்னர் இங்கு தெளிவுபடுத்தியது போல) R நைத்ரோஇமிடஸேலுக்கு ஒரு கரைப்பானாகிய குறைந் தது ஒரு சேதனவுறுப்பு அமிலத்தையாவது கொண்ட அல்லது அடக்கிய ஒரு திரவ ஊடகத்தில் ஒரு கரைசல் ; சுயாதீன மூல வடிவில் அல்லது ஓர் அமிலக்கூட்டலுப்பாகவுள்ள தாக்கக் கரை சலிலிருந்து 1-(2-ஐதரொட்சிஎதயில்)-5-நைத்ரோஇமிடஸோல் விளைவைக் கண்டுபிடித்தல்.*

*13 உரிமைக் கோரிக்கைகளும் 6 உதாரணங்களும் உள்ளன.*

*ஆர். எல். டி சில்வா,*
*ஆக்கவுரிமை பதிவாளர்.*

*கொழும்பு,*
*1973 மார்ச் 27.*

3-913—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

### அறிவித்தல்


பின்வரும் விவரக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது :—

1968 நவம்பர் 23 ம் திகதிய 6267 ம் இலக்கம் (46 ம் பிரிவின்கீழ் 16.8.66 ம் திகதிய ஐக்கிய இராச்சிய ஆக்கவுரிமைப் பதிவு இல. 1,085,340) சாண்டோஸ் லிமிட்டெட்.

" புதிய பொசுபோரிக், கந்தகபொசுபோரிக் அமில எசுத்தர் பெறுதிகள் "

பொழிப்பு :


பின்வரும் வாசகத்தைக் கொண்ட உரிமைக் கோரிக்கை 1 லிருந்து கண்டுபிடிப்பின் இயல்பை உறுதிப்படுத்தலாம் :




I


சூத்திரம் I இன் சேர்வைகளைத் தயாரிக்கும் ஒரு முறை—

இதில் $R_1$ குறிப்பதாவது : ——0—— (அற்கயில் $C_1$ முதல் $C_4$), $R_2$ குறிப்பதாவது : ——0—— (அற்கயில் $C_1$ முதல் $C_4$) அல்லது—N (அற்கயில் $C_1$ முதல் $C_4$) z, $R_3$ குறிப்பதாவது ——H, ——$CH_3$, ——OH அல்லது ——COO—— (அற்கயில் $C_1$ முதல் $C_4$), $R_4$ குறிப்பதாவது : ——$CH_3$, ஓர் அல்சன் அணு, ——$NO_2$ அல்லது ——H, Y குறிப்பதாவது S அல்லது O, n குறிப்பதாவது 1 முதல் 4 வரையிலான (இவையிரண்டும் உட்பட) ஒரு முழு எண். இதில் பின்வரும் சூத்திரம் II இன் சேர்வை புலனுகின்றது :




II

இச்சூத்திரத்தில் $R_3$ $R_4$ என்பன மேற்படி அர்த்தத்தைக் கொண்டுள்ளன. Z ஒரு கற்றயன் ; இது, பின்வரும் சூத்திரம் III இன் ஒரு சேர்வையுடன் தாக்கம் பெறுகின்றது.




III

இச்சூத்திரத்தில் $R_1$ $R_2$ Y என்பன மேற்படி அர்த்தத்தைக் கொண்டுள்ளன. X ஓர் அலசன் அணு ; எனினும் Z ஓர் ஐதரசன் அணுவைக் குறிக்கும் பொழுது, ஒரு பிணைக்கும் கருவியின் முன்னிலையிலேயே தாக்கம் நடைபெறுகிறது என்ற நிபந்தனைக்கு இணங்க.

11 உரிமைக் கோரிக்கைகளும் 11 உதாரணங்களும் 3 அட்டவணைகளும் உள்ளன.

கொழும்பு,
1972 ம் ஆப் நவம்பர் மீ 17 ந் உ.

ஆர். எல். டீ 'சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

3-287/I—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

---

**அறிவித்தல்**


பின்வரும் விவரக்கூற்று ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ளது :—

1968 டிசெம்பர் 2 ம் திகதிய 6269 ம் இலக்கம்(46 ம் பிரிவின்கீழ் 19.3.64 ம் திகதிய ஐக்கிய இராச்சிய ஆக்கவுரிமைப் பதிவு இல. 1, 010,582) பொயிரிங்கர் மான்ஹேய்ம் ஜீஎம்பீஎச்.

" புதிய நைத்ரோபியூரைல் பெறுதிகள் "

பொழிப்பு :

பின்வரும் வாசகத்தைக் கொண்ட உரிமைக் கோரிக்கை 1 லிருந்து கண்டுபிடிப்பின் இயல்பை உறுதிப்படுத்தலாம் :




என்ற பொதுச் சூத்திரத்தின் நைத்ரோபியூரைல் பெறுதிகள்—

இதில் R ஓர் ஐதரசன் அணு, அல்லது ஓர் அற்கயில் மூலகம், Z ஆனது α அல்லது γ நிலையிலுள்ள வினைல் கூட்டத்துடன் இணைக்கப்பட்ட ஒரு பைரிடைல் மூலகம்—இது பைரிடைல் கருவில் ஒரு அல்லது ஒன்றுக்கு மேற்பட்ட முனைவுக்குரிய அல்லது நீர்நாட்டமுள்ள பிரதிப் பொருளையும் அதிலுள்ள சதுர்அமோனியம் உப்புக்களையும் அமிலக் கூட்டல் உப்புக்களையும் காவுகின்றது.

29 உரிமைக் கோரிக்கைகளும் 17 உதாரணங்களும் உள்ளன.

கொழும்பு,
1973 ம் ஆப் மே மீ 09 ந் உ.

ஆர். எல். டீ சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

3-287/2—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

### அறிவித்தல்

பின்வரும் விவரக்கூற்று ஒப்புக்கொள்ளப்பட்டுள்ளது :—

1968 ம் ஆண்டு டிசம்பர் மாதம் 5 ம் திகதிக்குரிய இல. 6271 (பிரிவு 46 இன் கீழ் 03.03.1964 ஆம் திகதியிட்ட 1051686 ஆம் இலக்க ஐக்கிய இராச்சிய ஆக்கவுரிமை பதிவு செய்யப்பட்டுள்ளது.


சாண்டோஸ் லிமிடெட்.

" சக்கர பல்பெப்தைட்டுகள் தொடர்பான திருத்தங்கள் "


பொழிப்பு :

கண்டுபிடிப்பின் தன்மையை பின்வருமாறு கூறும் உரிமை கோரல் 1 இல் இருந்து நிச்சயித்துக் கொள்ளலாம் :

சூத்திரம் I ஐ உடைய பல்பெப்தைட்டு ஒன்றை ஆக்கும் முறை.




இதில் சூத்திரம் V ஐ உடைய நொனுபெப்தைட்டை ஒட்சியேற்றி




இவ்வொட்சியேற்றம் 4 தொடக்கம் 6 வரை ph பெறுமானமுள்ள நீர்க்கரைசலில் நடைபெறுகிறது. ஒரு அமிலக்கூட்டல் உப்பை உண்டாக்க விரும்பின், மேற்கண்டவாறு பெறப்பட்ட சேர்வை ஒரு சேதன அல்லது அசேதன அமிலத்துடன் தாக்கமுறச் செய்யப்படுகிறது.

9 உரிமை கோரல்களும் 2 உதாரணங்களுமுள்ளன.

கொழும்பு,
1972 ம் ஆண்டு நவம்பர் மீ 17 ந் உ.

ஆர். எல். த சில்வா,
ஆக்கவுரிமைப் பதிவாளர்.

3-287/3—07.03.75 ந் திகதிய வர்த்தமானி இல. 154

**அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்குமுரிய புதிய கிரய விகிதங்கள்**

**01.12.1968 தொடங்கி அமுலுக்கு வந்தது**

## "இலங்கைக் குடியரசு வர்த்தமானி"

**வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படுவது**

1. *பிரசுரிக்கப்படும் சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும்* **விளம்பரதாரர்களே பொறுப்பாளராவர்.**

2. *தனிப்பட்ட விளம்பரதாரர்களின் அறிவித்தல்களும், விளம்பரங்களும் உரிய முழுப் பணத்துடன்* **அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு,** *அவர்களுக்கு நேரில் அல்லது தபால் மூலம் சேர்க்கப்படுதல் வேண்டும்.*

3. காரியாலய நேரம் மு. ப. 8.00 மணி முதல் பி. ப. 4.15 மணி வரையாகும்.

4. பணம் கொடுக்கல் வாங்கல் மு. ப. 8.30 மணி முதல் பி.ப. 2.45 மணிவரை நடைபெறும்.

5. **சகல அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் முற்பணம் அனுப்பப்படல் வேண்டும்.** *தபால் மூலம் அனுப்பப்படும் அறிவித்தல்கள், விளம்பரங்கள் ஆகியவைகளுடன் அரசாங்க அழுத்தகரின பெயருக்கு எழுதப்பட்ட மணிஓடர் அல்லது போஸ்ரல் ஓடர் அல்லது காசோலை அனுப்பப்படல் வேண்டும்.*

6. **நகலை கடதாசியின் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதுதல் விசேஷமாக ரைப் அடித்தல்** *பிழைகளையும் காலதாமதத்தையும். தவிர்க்க ஏதுவாகும்.*

7. **கையொப்பங்களின் கீழ் அப்பெயர்கள் உறுப்பான எழுத்தில் திருப்பி எழுதப்படல் வேண்டும்.**

8. *வியாபார விளம்பரங்களும், பெயர் மாற்றம் பற்றிய விளம்பரங்களும் பிரசுரத்துக்கு ஏற்றுக்கொள்ளப்படமாட்டா.*

9. *நியாயஸ்தலத்தின் கட்டளையில் கொடுக்கப்படவேண்டிய விளம்பரங்கள் " சுப்பிறீம் கோட் புறொக்ரரால் "* **கையொப்பமிடப்பட்டு** *அல்லது கையொப்பம் அத்தாட்சிப்படுத்தப்பட்டு அனுப்பாவிடின் பிரசுரிக்கப்படமாட்டா.*

10. *அறிவித்தல்களுக்கும், விளம்பரங்களுக்கும் அங்கீகரிக்கப்பட்ட கிரய விகிதங்கள் 1968 ஆம் ஆண்டு டிசெம்பர் மாதம் 01 ந் திகதியிலிருந்து பின்வருமாறு :—*

| | ரூ. ச. |
|---|---|
| *ஒரு அங்குலம் அல்லது அதற்குக் குறைய* .. .. .. | 20 0 |
| *மேலதிகமான ஒவ்வொரு அங்குலம் அல்லது அதன பகுதி* .. .. | 20 0 |
| *ஒரு பந்தி அல்லது வர்த்தமானியின் ½ பக்கம்* .. .. .. | 220 0 |
| *இரு பந்திகள் அல்லது வர்த்தமானியின் ஒரு பக்கம்* .. .. .. | 440 0 |

*ஒவ்வொரு அங்குலத்தின் பகுதிக்கும் முழு அங்குலத்தின் கிரயம் செலுத்தப்படல வேண்டும்.*

11. **வெள்ளிக்கிழமை தோறும் இலங்கைக் குடியரசு வர்த்தமானி வெளியிடப்படும்.** *அரசாங்க விடுமுறை இடையிடின் வெளியீட்டு நாள் மாற்றப்படும்.*

12. **1966,ம் ஆண்டு மார்ச் மாதம் 01 ம் திகதி தொடக்கம் வர்த்தமானியின் ஒவ்வொரு பகுதி இறுதியிலும் கொடுக்கப்பட்டுள்ள அட்டவணையின்** பிரகாரம் அரசாங்க அழுத்தகர், அரசாங்க அச்சுத் திணைக்களம், கொழும்பு *அவர்கட்குச் சகல அறிவித்தல்களும் விளம்பரங்களும் வந்து சேர வேண்டும்.*

13. *சந்தா விபரம் 01.12.68 ந் திகதியில் இருந்து நடைமுறைக்கு வரும் :—*

| **இலங்கைக் குடியரசு வர்த்தமானி** (வருடத்திற்கு) | உள்ளூர் ரூ. ச. | வெளியூர் ரூ. ச. |
|---|---|---|
| *ஒவ்வொரு பகுதியும்* .. .. .. .. | 46 0 .. | 60 0 |
| *முதற் பகுதியின் தனிப் பிரிவு* .. .. .. | 36 0 .. | 42 0 |
| *முதற் பகுதியின் இரு பிரிவுகள்* .. .. .. | 43 50 .. | 51 50 |

**ஆறு மாதங்களுக்குக் குறையாமலும், வருட முடிவிலும், அரை வருடத்திலும் முடிவடையக்கூடியதுமான** கால **வல்லைக்கே சந்தா ஏற்றுக்கொள்ளப்படும்.**

**தனிப்பட்ட பிரதிகள் (இருப்பிலிருந்தால்) அவற்றின் விகிதங்கள்**

| | விலை ரூ. ச. | தபாற் செலவு (உள்ளூர்) ரூ. ச. |
|---|---|---|
| (அ) (i) *வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் ஒவ்வொரு பகுதியும்* .. .. | 0 50 .. | 0 20 |
| (ii) *வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் ஒவ்வொரு பகுதியும்* .. .. | 1 0 .. | 0 20 |
| (ஆ) (i) *வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குள் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும* .. | 0 30 .. | 0 15 |
| (ii) *வர்த்தமானியில் இடப்பெற்ற திகதியிலிருந்து ஒரு மாதத்திற்குப் பின் முதற் பகுதியின் ஒவ்வொரு பிரிவும்* .. | 0 60 .. | 0 15 |

**இவைகளில் எவையேனும் பெறவிரும்புவோர் சரியான பணத் தொகையை அதிபர், அரசாங்க பிரசுர நிலையம், தபாற் பெட்டி இல. 500, கொழும்பு என்ற விலாசத்திற்கு அனுப்புதல் வேண்டும். சந்தாப் பணம் ஏற்பதற்கும் தனிப்பிரதிகள் விற்பனை செய்வதற்கும் இவரே முழுப் பொறுப்பாளியாவார்.**

## வர்த்தமானி வெளியீடு சம்பந்தமான முக்கிய அறிவித்தல்

இலங்கைக் குடியரசு வர்த்தமானி சாதாரணமாக வெள்ளிக்கிழமை தோறும் வெளியிடப்படும். வெள்ளிக் கிழமை அரசாங்க விடுமுறை நாளாக இருப்பின் அதற்கு முந்திய வேலை நாளில் வர்த்தமானி வெளி யிடப்படும். வர்த்தமானிக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும் அந்த வாரத்தில் ஏற்படும் அரசாங்க விடுமுறை நாட்களைப் பொறுத்து மாற்றப்படும்.

இலங்கைக் குடியரசு வர்த்தமானி பிரசுரமாகும் திகதிகளும் அவ்வவ் வர்த்தமானிகளுக்குரிய அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதி நாளும், நேரமும் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் அட்டவணை யில் காட்டப்பட்டுள்ளன. கீழே குறிப்பிடப்பட்டுள்ள நேரங்களுக்குப் பிந்திக் கிடைக்கும் அறிவித்தல்கள் எல்லாம் பிரசுரிக்கப்படமாட்டா. இனி வரப்போகும் குடியரசு வர்த்தமானியில் பிரசுரிக்க விரும்பின் அதற்குரிய மாற்றங்கள் செய்து திருப்பி அனுப்புதற் பொருட்டு விலாசதாரருக்கு தபால் மூலம் அனுப்பி வைக்கப்படும். குடியரசு வர்த்தமானியில் குறிப்பிடப்பட்ட திகதிகளிலே அறிவித்தல்களைப் பிரசுரிக்க விரும்புவோர் அறிவித்தல்கள் தபால் மூலம் அரசாங்க அச்சுத் திணைக்களத்துக்கு வந்துசேரப் போதிய அவகாசம் கொடுப்பது எல்லோருடைய நன்மைக்கும் உகந்ததாய் இருக்கும்.

குடியரசு வர்த்தமானிக்குரிய சந்தாப் பணங்கள் யாவும் **அரசாங்க பிரசுராலய அதிபர், தபாற் பெட்டி இல. 500, செயலகம், கொழும்பு** என்ற விலாசத்திற்கு நேரடியாகச் சேர்ப்பிக்கப்பட வேண்டும். **அரசாங்க அழுத்தகர் வர்த்தமானிக்குரிய சந்தாப்பணங்கள் எதுவும் ஏற்றுக்கொள்ளமாட்டார்.**

**முக்கிய கவனிப்பு.**—குடியரசு வர்த்தமானி விளம்பரங்களுக்கான பணங்கள் யாவும் **அரசாங்க அழுத்தகரினால்** ஏற்றுக்கொள்ளப்படும் என்பதையும், அரசாங்க பிரசுராலய **அதிபரால்** ஏற்றுக் கொள்ளப்படமாட்டா என்பதையும் கவனத்திற் கொள்க.

**அட்டவணை—1975**

| மாதம் | வெளியீட்டு நாள் | | அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளும் கடைசித் திகதியும் நேரமும் | | |
|---|---|---|---|---|---|
| பெப்புருவரி .. | வெள்ளி | 7.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 31.1.75 |
| | வெள்ளி | 14.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 7.2.75 |
| | வெள்ளி | 21.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 14.2.75 |
| | வெள்ளி | 28.2.75 .. | 12 மதியம் | வெள்ளி | 21.2.75 |
| மாச்சு .. .. | வெள்ளி | 7.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 28.2.75 |
| | வெள்ளி | 14.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 7.3.75 |
| | வெள்ளி | 21.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 14.3.75 |
| | வியாழன் | 27.3.75 .. | 12 மதியம் | வெள்ளி | 21.3.75 |
| ஏப்பிறல் .. .. | வெள்ளி | 4.4.75 .. | 12 மதியம் | வியாழன் | 27.3.75 |
| | வெள்ளி | 11.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 4.4.75 |
| | வெள்ளி | 18.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 11.4.75 |
| | வியாழன் | 24.4.75 .. | 12 மதியம் | வெள்ளி | 18.4.75 |
| மே .. .. | வெள்ளி | 2.5.75 .. | 12 மதியம் | வியாழன் | 24.4.75 |
| | வெள்ளி | 9.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 2.5.75 |
| | வெள்ளி | 16.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 9.5.75 |
| | வெள்ளி | 23.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 16.5.75 |
| | வெள்ளி | 30.5.75 .. | 12 மதியம் | வெள்ளி | 23.5.75 |
| யூன் .. .. | வெள்ளி | 6.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 30.5.75 |
| | வெள்ளி | 13.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 6.6.75 |
| | வெள்ளி | 20.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 13.6.75 |
| | வெள்ளி | 27.6.75 .. | 12 மதியம் | வெள்ளி | 20.6.75 |

**எல். டபிள்யூ. பீ. பீரிஸ்,**
அரசாங்க அழுத்தகர்.

அரசாங்க அச்சுத் திணைக்களம்,
கொழும்பு,
1975 ம் ஆண்டு சனவரி 01 ந் உ.

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.